# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2091/6 - 2018 ඔක්තෝබර් මස 01 වැනි සඳුදා - 2018.10.01

*2091/6 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (xv)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, (2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதிய 2079/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான)* மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகக் கருதப்படுகின்றதான இலங்கை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதான 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதிய1603/ 35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படுகின்ற "பிரயோக விஞ்ஞான பீடம்" என்னும் விடயத்துக்கு நேரொத்ததான அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் காணப்படும் "10. விளையாட்டு விஞ்ஞானத் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவினைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

"11. பாலிமர் அறிவியல் துறை".

கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ,
உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2018, செத்தெம்பர் 28.*

*10-441*

1A - PG 4255 — 508 (2018/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.